DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No.201/2021**

**Deposition of Witness for Prosecution : P.W.17**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தமிழரசன் | தகப்பனார் பெயர் கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 07.01.2025

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது காகலனி புதுகாலனி தெருவில் வசித்து வருகிறேன். இறந்து போன அய்யப்பனை எனக்கு தெரியும். அவர் எங்கள் ஊர்காரர். 27.03.2021ம் தேதி இரவு 11.00 மணிக்கு இறந்துவிட்டதாக கிராமத்தில் உள்ளவர்கள் மூலம் கேள்விபட்டேன். இறந்த இடத்திற்கு சென்றேன். அப்போது அங்கு ஆய்வாளர் இருந்தார். அவர் இறந்த இடம் கருவை தோப்பாக இருந்தது. கருவை தோப்பிற்கு பக்கத்தில் தெரு மற்றும் வயல் போன்றவை இருந்தது. அதனை ஆய்வாளர் எழுதி கொண்டார். அதில் கிருஷ்ணமூர்த்தியும் நானும் கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ளது எனது கையெழுத்து தான். அந்த பார்வை மகஜர் ஏற்கனவே அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. என்னை இது சம்மந்தமாக ஆய்வாளர் விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் கையெழுத்து போட்ட பார்வை மகஜரை யார் எழுதினார்கள் என்று எனக்கு நினைவு இல்லை. அந்த பார்வை மகஜரில் என்ன என்ன எழுதியிருக்கிறது என்று என்னால் துள்ளியமாக சொல்லமுடியாது

என்றால் சரிதான். இறந்து போன அய்யப்பன் எனது சமூதாயத்தை சேர்ந்தவர். என்னை கீழ்வேளூர் காவல் நிலையத்தில் தான் வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்தார்கள். நான் காவல் நிலையம் சென்று இருந்தேன். நான் கையெழுத்தை காவல் நிலையத்தில் வைத்து தான் போட்டேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

NAGAPATTINAM.

**Sessions Case No.201/2021**

**Deposition of Witness for Prosecution : P.W.16**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | டாக்டர். சங்கர் | தகப்பனார் பெயர்<br>கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 07.01.2025

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது கோவை இ.எஸ்.ஐ. அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சட்ட மருத்துவ துறையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28.03.2021ம் தேதி நாகப்பட்டினம் அரசு தலைமை மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வந்த போது நாகப்பட்டினம் மாவட்ட காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட செறுநல்லூர் கிராமத்தை சேர்ந்த தெட்சிணாமூர்த்தியின் மகனான அய்யப்பன் வயது 22 என்பவரது பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக சவ கிடங்கில் வைக்க வேண்டி அன்றை தினம் அதிகாலை 4.00 மணியளவில் கீழ்வேளூர் காவல் நிலைய தலைமை காவலர் 263 தியாகராஜன் என்பவர் பிரேதத்தை கொண்டு வந்தார். இறந்தவரை சோதனை செய்து பார்த்து இறப்பை உறுதி செய்து பிரேதத்தை சவகிடங்கில் வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் முன் விசாரணையில் சொன்ன சங்கதிகள் அனைத்தும் தவறானது, நான் அது போல் எந்த செயலையும் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**( காணொலி மூலம் சாட்சியம் பதிவு செய்யப்பட்டது)**